**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C.No. 71 /2020**

2024 ஆம் வருடம் ஜுன் மாதம் 18 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.காளிரத்தினம் (அ.சா.– 3) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | வயது | : |
| கிராமம் | : | இனம் | : பெண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 18.06.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

எதிரி முன்னிலையாகியுள்ளார்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் பழனி சத்யா நகரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 திவ்யகுமார் எனது தம்பி. அ.சா.2 காளீஸ்வரி எனது தாயார். 29.6.2016 அன்று எனது தம்பி அவரது நண்பரை பஸ் ஏற்றிவிடுவதற்காக காரமடைக்குப் போனார். அசோக் என்ற பையன் பஸ் ஏறி கல்லூரிக்கு சென்றுவிட்டார். எனது தம்பியும், பூபதி என்ற நண்பரும் டீக்குடிப்பதற்காக காரமடை பஸ் நிறுத்தம் அருகில் உள்ள பேக்கரிக்கு சென்றனர். அப்போது ஆஜர் எதிரி மணி என்பவர் எனது தம்பியை வெட்டிவிட்டார். என் தம்பி பயத்தில் ஓடியபோது பெரியநாயகியம்மன் கோவில் அருகில் மயங்கி விழுந்தபோது மீண்டும் எதிரி கை மற்றும் தலையில் என் தம்பியை வெட்டிவிட்டார். அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்சை அழைத்து சிகிச்சைக்கு செல்லும் வழியில் தான் எங்களுக்கு தகவல் கொடுத்தார்கள். அதன்பிறகு நாங்கள் பழனி அரசு

மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த சமயம் நான் வீட்டில் இருந்தேன். சம்பவம் எங்கு நடந்தது எப்படி நடந்தது என்று நான் நேரடியாகப் பார்க்கவில்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.06.25 16:31:42 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

பழனி.